RCoA
Royal College of Anaesthetists

# மயக்க மருந்து வழங்கல் – ஆபத்துகள் மற்றும் பக்க விளைவுகள்

# பற்கள், உதடுகள் மற்றும் நாக்குக்குச் சேதம்

## இந்தச் சிற்றேட்டைப் பற்றி

இந்தச் சிற்றேடு, உங்களுக்குப் பொது மயக்க மருந்து வழங்கப்பட்டால் **உங்கள் பற்கள், உதடுகள் மற்றும் நாக்குக்கு ஏற்படக்கூடிய சேதத்தைப்பற்றியது**. இந்தச் சேதம் எப்படி ஏற்படலாம் என்பதையும், அதைப்பற்றி என்ன செய்யலாம் என்பதையும் இது விளக்குகிறது.

பொது உணர்ச்சி நீக்கிகள் அல்லது மயக்க மருந்துகள் என்பவை ஆழமான, தூக்கத்தைப் போன்ற நிலையைக் கொடுக்கும் மருந்துகளாகும். சில அறுவைச் சிகிச்சைகள் மற்றும் செயல்முறைகளுக்கு இவை தேவைப்படுகின்றன. உங்களுக்கு ஒரு பொது உணர்ச்சி நீக்கி வழங்கப்பட்டால் நீங்கள் மயக்க நிலையில் இருப்பீர்கள், எதையும் உணரமாட்டீர்கள்.

வெவ்வேறு வகை உணர்ச்சி நீக்கிகளைப்பற்றி நீங்கள் எங்கள் இணையத் தளத்தில் படிக்கலாம். இது வெவ்வேறு மொழிகளில் கிடைக்கிறது: www.rcoa.ac.uk/patientinfo/translations#languages.

## மயக்க மருந்து வழங்குதலின்போது பற்கள், உதடுகள் மற்றும் நாக்குக்கு ஏற்படக்கூடிய சேதத்தைப்பற்றி

சில நேரங்களில், மயக்க மருந்து வழங்கப்பட்டபிறகு உங்கள் வாய் மற்றும் உதடுகளில் சிறு வெட்டுகள் அல்லது சிராய்ப்புகள் இருக்கலாம். இவை பொதுவாகச் சில நாட்களில் குணமாகிவிடும்.

பொது உணர்ச்சி நீக்கி வழங்கலின்போது பற்கள் எதிர்பாராமல் உடைந்துபோகலாம், ஆடலாம், அல்லது, சில நேரங்களில் வெளியில் வந்துவிடலாம்.

பொது உணர்ச்சி நீக்கி வழங்கலின்போது, உங்கள் உடலில் உள்ள தசைகள் தளர்கின்றன. உங்கள் தொண்டை மற்றும் நெஞ்சைச் சுற்றியுள்ள தசைகளும் அவ்வாறே செயல்படுகின்றன. இதனால், உங்கள் நுரையீரல்களுக்குச் செல்லும் காற்றின் அளவு குறையலாம்.

உங்கள் நுரையீரலுக்குத் தொடர்ந்து ஆக்சிஜன் கிடைப்பதை உறுதிசெய்வதற்காக, மயக்க மருந்து வல்லுனர் உங்கள் தொண்டையில் மூச்சுக் குழாய் ஒன்றை வைத்து, உங்கள் காற்று வழி திறந்திருப்பதை உறுதிசெய்யலாம். பொதுவாக, நீங்கள் மயக்க நிலைக்குச் சென்றபிறகு அவர்கள் இதைச் செய்வார்கள்.


நீங்கள் மயக்க நிலையில் இருக்கும்போது உங்கள் உணர்ச்சி நீக்கி வல்லுனர் பயன்படுத்தும் குழாய்கள் அல்லது முகமூடிகள் எதிர்பாராமல் உங்கள் பற்கள், உதடுகள் அல்லது நாக்குக்குச் சேதத்தை உண்டாக்கலாம். உணர்ச்சி நீக்கி வழங்குதலின்போது உங்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு இந்தக் கருவி தேவைப்படுகிறது.

உணர்வற்ற நிலையின்போது உங்கள் மூச்சுப் பாதை மற்றும் மூச்சுவிடல்பற்றிய கூடுதல் தகவல்களை எங்கள் இணையத் தளத்தில் படிக்கலாம். இது வெவ்வேறு மொழிகளில் கிடைக்கிறது: www.rcoa.ac.uk/patientinfo/translations#languages.

## இது நிகழ எவ்வளவு வாய்ப்புள்ளது?

### உதடுகள் மற்றும் நாக்கில் சிறு வெட்டுகள் அல்லது சிராய்ப்புகள்

**ஒவ்வொரு 100 பேரில்**



**1 முதல் 5 நபர்களுக்கு ஏற்பட்டது** | **95 முதல் 99 நபர்களுக்கு ஏற்படவில்லை**

### ஒரு பல் மருத்துவர் தேவைப்படும் அளவுக்குப் பற்களில் சேதம்

**ஒவ்வொரு 10,000 பேரில்**

| | |
|---|---|
| **5 நபர்களுக்கு ஏற்பட்டது** | **9,995 நபர்களுக்கு ஏற்படவில்லை** |

பற்களுக்குச் சேதம் ஏற்பட்ட நபர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்களுடைய பற்கள் மற்றும் ஈறுகள் அறுவைச் சிகிச்சைக்கு முன்பாகவே மோசமான நிலையில் இருந்தன.

இந்த எண்கள் ஆராய்ச்சி ஆய்வுகளிலிருந்து வருகின்றன. நாங்கள் இந்த எண்களை எங்கிருந்து பெற்றோம் என்பதை நீங்கள் எங்கள் இணையத் தளத்தில் காணலாம்: www.rcoa.ac.uk/patientinfo/risks/evidence.

## எந்தச் சூழ்நிலைகளில் இது நிகழ்வதற்குக் கூடுதல் வாய்ப்பு உண்டாகும்?

இந்தச் சூழ்நிலைகளில் சேதம் ஏற்படக் கூடுதல் வாய்ப்பு உண்டு:

- உங்களால் உங்கள் வாயை மிகவும் அகலத் திறக்க இயலாது அல்லது உங்களால் உங்கள் கழுத்தை எளிதில் திருப்ப இயலாது. எடுத்துக்காட்டாக, பொது உணர்ச்சி நீக்கி வழங்கலின்போது, சில மூட்டு வீக்க நிலைகளால் உங்கள் கழுத்தை நகர்த்துவது அல்லது உங்கள் தலையை நிலைப்படுத்துவது கடினமாகலாம்
- உங்களுக்கு மிகவும் முன் தள்ளப்பட்ட மேல் பற்கள் அல்லது சிறிய கீழ்த் தாடை உள்ளது
- உங்களுக்கு ஒரு நெருக்கடி நேரத்தில் பொது உணர்ச்சி நீக்கி வழங்கல் தேவைப்படுகிறது
- உங்களுக்குப் பொது உணர்ச்சி நீக்கி வழங்கலுடன் நெருக்கடி நேரச் சிசேரியன் அறுவைச் சிகிச்சை தேவைப்படுகிறது
- நீங்கள் உடல் பருமன் கொண்டவர் அல்லது உங்கள் கழுத்தருகில் கூடுதல் எடையைச் சுமப்பவர்
- உங்கள் வாய், கழுத்து, தாடை அல்லது உணவுக் குழாயில் (ஓயசோ:ாபாகஸ்) அறுவைச் சிகிச்சை நடைபெறுகிறது.

## இதை எப்படித் தடுக்கலாம்

உங்கள் பற்கள் சேதப்படுகிற ஆபத்தைக் குறைப்பதற்காக, அறுவைச் சிகிச்சைக்கு முன்னால் நீங்களே சில விஷயங்களைச் செய்யலாம்.

உங்களுடைய பற்கள் ஆடுகின்றன அல்லது உங்கள் ஈறுகளில் புண் உள்ளது அல்லது நீங்கள் பல் தேய்க்கும்போது ஈறுகளில் இரத்தம் வருகிறது என்றால், உங்களுக்கு அறுவைச் சிகிச்சை உள்ளது என்று தெரிந்தவுடன் நீங்கள் உங்கள் பல் மருத்துவரைச் சந்திக்கவேண்டும்.

உங்களுக்கு இந்தச் சூழ்நிலைகள் இருந்தால் உங்கள் உணர்ச்சி நீக்கி வல்லுனரிடம் அதைச் சொல்லுங்கள்:

- உங்கள் பற்கள் ஆடுகின்றன அல்லது உங்கள் பற்கள் மற்றும் ஈறுகள் தொடர்பாக வேறு ஏதேனும் சிக்கல் உள்ளது
- நீங்கள் நீக்கக்கூடிய பிரேஸ் அல்லது நெகிழ்வுப் பட்டைகளை அணிந்துள்ளீர்கள்

- நீங்கள் இம்பிளான்ட்கள், கிரௌன்கள், பிரிட்ஜ்கள், வெனீர்கள் அல்லது பொய்ப்பல் வைத்துள்ளீர்கள்
- நீங்கள் நாக்கு குத்திக்கொண்டுள்ளீர்கள், அல்லது உதடு குத்திக்கொண்டுள்ளீர்கள்.

இதற்குமுன் உங்களுக்குப் பொது உணர்ச்சி நீக்கி வழங்கப்பட்டிருந்தால், அப்போது பின்வருவன நடந்திருந்தால் நீங்கள் உங்கள் உணர்ச்சி நீக்கி வல்லுனரிடம் அதைப்பற்றிச் சொல்லவேண்டும்:

- உங்கள் காற்று வழியில் ஒரு குழாயை இடுவது கடினமாக இருந்தது என்று உங்களிடம் சொல்லப்பட்டது
- உங்கள் பற்கள் சேதமடைந்திருந்தன.

சில நேரங்களில், உங்கள் உணர்ச்சி நீக்கி வல்லுனர் உங்கள் மருத்துவப் பதிவுகளைப் பார்த்து, இந்தச் சிரமங்களை உண்டாக்கியது எது என்று புரிந்துகொள்வார், மீண்டும் சேதம் உண்டாகாதபடி தவிர்ப்பார்.

## ஒருவேளை என் பற்கள் சேதமடைந்தால் என்ன ஆகும்?

அறுவைச் சிகிச்சையின்போது உங்கள் பற்கள் சேதமடைந்திருந்தால், உங்கள் உணர்ச்சி நீக்கி வல்லுனர் அதை உங்களுக்குச் சொல்வார். சில பற்கள் வெளியில் வந்திருந்தால், அவர் அதை உங்களுக்குத் திரும்பக் கொடுப்பார். உங்களுக்கு வலியைக் குறைத்தல் தேவைப்பட்டால், அவர் அதற்கு ஆவன செய்வார், என்ன செய்யவேண்டும் என்று உங்களுக்கு அறிவுறுத்துவார்.

சில மருத்துவமனைகளில் பல் அறுவைச் சிகிச்சை வல்லுனர்கள் இருப்பார்கள். இவர்கள் சேதத்தை ஆராய்ந்து சரி செய்வார்கள். ஒருவேளை, அந்த மருத்துவமனையில் அப்படி யாரும் இல்லை என்றால், நீங்கள் உங்களுடைய பல் மருத்துவரிடம் செல்லலாம். இதற்கு ஆகும் மருத்துவச் செலவுகளை அந்த மருத்துவமனையிலிருந்து கோரிப் பெற்றுக்கொள்ளலாம். நீங்கள் உங்கள் மருத்துவமனையிடம் பேசி, அறுவைச் சிகிச்சையின்போது பல் சேதம் தொடர்பான அவர்களுடைய கொள்கையைத் தெரிந்துகொள்ளவேண்டும், மருத்துவச் செலவைக் கோரிப் பெறுவதற்கான ஒரு படிவத்தைக் கோரவேண்டும்.

உங்கள் உணர்ச்சி நீக்கி மருத்துவர் உங்கள் தொண்டையில் ஒரு குழாயை வைப்பதில் சிரமம் இருந்திருந்தால், அல்லது, உங்கள் பற்கள் சேதமடைந்திருந்தால், என்ன நடந்தது என்பதுபற்றிய ஓர் எழுத்து வடிவ அறிக்கையைக் கேளுங்கள். வருங்காலத்தில் உங்களுக்கு இன்னோர் உணர்ச்சி நீக்கி வழங்குதல் தேவைப்பட்டால், இந்தத் தகவல் உயிர் காக்கக்கூடும்.

கடினமான காற்று வழிச் சங்கம் ஒரு காற்று வழி விழிப்பூட்டல் அட்டைத் திட்டத்தைக் கையாள்கிறது. உங்கள் உணர்ச்சி நீக்கி வல்லுனர் உங்களுக்கு அந்தத் திட்டத்தைப்பற்றிச் சொல்வார். நீங்கள் இந்த இணைப்பில் இதுபற்றிய கூடுதல் தகவல்களைக் காணலாம்: https://das.uk.com/dar.

## பொறுப்பு துறப்பு

இந்தச் சிற்றேட்டில் உள்ள தகவல்கள் துல்லியமாகவும் சமீபத்தியவையாகவும் இருக்கவேண்டும் என்பதற்காக நாங்கள் மிகவும் முயற்சி செய்கிறோம், ஆனால், இதற்கு எங்களால் உத்தரவாதம் அளிக்க இயலாது. இந்தப் பொதுத் தகவலின் மூலம் உங்களுக்கு இருக்கக்கூடிய எல்லாக் கேள்விகளுக்கும் பதில் கிடைத்துவிடும் என்றோ, உங்களுக்கு முக்கியமாக இருக்கக்கூடிய அனைத்தையும் இதனால் கையாள இயலும் என்றோ நாங்கள் எதிர்பார்க்கவில்லை. நீங்கள் உங்களுடைய தெரிவுகளை, உங்களுக்கு இருக்கும் எந்தவொரு கவலைகளையும் உங்கள் மருத்துவக் குழுவுடன் விவாதிக்கவேண்டும், அதற்கு இந்தச் சிற்றேட்டை ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்தலாம். இந்தச் சிற்றேட்டைமட்டும் ஓர் அறிவுறுத்தலாகக் கருதக்கூடாது. எந்தவொரு வணிக அல்லது தொழில் நோக்கத்துக்கும் இதைப் பயன்படுத்த இயலாது. முழுப் பொறுப்பு துறப்புக்கு, இதைப் பாருங்கள்: [www.rcoa.ac.uk/patient-information/translations/tamil].

அனைத்து மொழிபெயர்ப்புகளும் Translators without Borders மொழிபெயர்ப்பாளர் சமூகத்தால் வழங்கப்படுகின்றன. இந்த மொழிபெயர்ப்புகளின் தரம், மொழிபெயர்ப்புகளை முடிந்தவரை துல்லியமாக மாற்றுவதற்காக சரிபார்க்கப்படுகிறது, ஆனால் தவறான மற்றும் சில தகவல்களை தவறாகப் புரிந்துகொள்வதற்கான ஆபத்து உள்ளது.

# நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை எங்களிடம் சொல்லுங்கள்

இந்த காகிதத்துண்டு பிரசுரத்தை விருத்தி செய்ய ஆலோசனைகளை நாங்கள் வரவேற்கிறோம்.

இதுபற்றி உங்களுக்கு ஏதேனும் கருத்துகள் இருந்தால், தயவுசெய்து அவற்றை இந்த மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்: patientinformation@rcoa.ac.uk

**Royal College of Anaesthetists**
சர்ச்சில் இல்லம், 35 ரெட் லயன் சதுக்கம், லண்டன் WC1R 4SG

# www.rcoa.ac.uk

ஆறாம் பதிப்பு, நவம்பர் 2024

இந்த சிற்றேடு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் மதிப்பாய்வு செய்யப்படும்.

**© 2024 Royal College of Anaesthetists**
நோயாளித் தகவல் தாள்களை உருவாக்கும் நோக்கத்துக்காக இந்தச் சிற்றேட்டை நகல் எடுத்துக்கொள்ளலாம். இந்த அசல் மூலத்தை தயவுசெய்து மேற்கோள் காட்டுங்கள். இந்தச் சிற்றேட்டின் ஒரு பகுதியை நீங்கள் இன்னொரு வெளியீட்டில் பயன்படுத்த விரும்பினால், சரியான ஒப்புகை வழங்கப்பட வேண்டும், வணிகச் சின்னங்கள், அடையாளக் குறியிடுதல், படங்கள் மற்றும் படவுருக்கள் நீக்கப்படவேண்டும். மேலும் தகவல்களுக்கு, தயவு செய்து எங்களைத் தொடர்பு கொள்ளவும்.